பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

## " திடன் கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன். "


யோவான் 16:33

செய்தி மலர்
2024
ஜீலை

இதழ் : 15
மலர் : 20



# சபை ஊழியரின் அன்பு மடல்



## சிலுவை எடுத்துக்கொண்டு என்னை பின்பற்றி வா

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே, கடந்த ஜீன் மாதம் முழுவதும் நம்மை நடத்தின தேவன் வரும் ஜுலை மாதத்திலும் நம்மை கரம் பிடித்து வழி நடத்துவார்.

யாக்கேயின் குமாரனாகிய ஆகூர் என்னும் புருஷன் ஈத்தியேலுக்கு வசனித்து சொன்ன வார்த்தை "இரண்டு மனு உம்மிடத்தில் கேட்கிறேன். நான் மரிக்கும் பயரியந்தமும் அவைகளை எனக்கு மறுக்காமல் தாரும். மாயையையும் பொய் வசனிப்பையும் எனக்கு தூரப்படுத்தும். தரித்திரத்தையும் ஐசுவரியத்தையும் எனக்கு கொடாதிருப்பீராக. நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கும் தரித்திரப்படுகிறதினால் திருடி என் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கும் என் படியை எனக்கு அளந்து என்னை போஷித்தரும்" நீதி-30:7-9

ஆம் பிரியமானவர்களே இயேசு கிறிஸ்துவும் கூட எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்கு தாரும்" மத்-6:12 என்று தினமும் ஜெபிக்க சொன்னார். நாமும் இதுபோல் ஞானமாக ஜெபிக்க கற்றுக்கொள்வோமாக.

### ஐசுவரியம் வேண்டாம்...

ஒரு முறை ஐசுவரியவான் வாலிபன் இயேசுவிடம் வந்து முழங்கால் படியிட்டு நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்ள நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான். அதற்கு இயேசு விபசாரம் செய்யாதிருப்பாயாக, கொலை செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக, வஞ்சனை செய்யாதிருப்பாயாக, உன் தகப்பனையும் உன் தாளையும் கனம் பண்ணுவாயாக என்கிற கற்பனைகளை அறிந்திருக்கிறாயே என்றார். அதற்கு அவன் போதகரே இவைகளெல்லாம் என் சிறு வயது முதல் கைக்கொண்டிருக்கிறேன் என்றான்.

இயேசு அவனைப் பார்த்து அவனிடத்தில் அன்பு கூர்ந்து உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு நீ போய் உனக்குண்டானவைகளை எல்லாம் விற்று தரித்திரருக்கு கொடு. அப்பொழுது பரலோகத்திலே உனக்கு பொக்கிஷம் உண்டாயிருக்கும் பின்பு சிலுவை எடுத்துக்கொண்டு என்னை பின்பற்றி வா என்றார். அவன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால் இந்த வார்த்தையைக் கேட்டு மனமடிந்து துக்கத்தோடே போய் விட்டான். அப்பொழுது இயேசு சீஷர்களை நோக்கி "ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய ராஜ்ஜியத்திடல் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது. ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும் ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்றார்.

வேதம் கூறுகிறது பண ஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து விசுவாசத்தை விட்டு வழுவி அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக் கொண்டிருக்கிறார்கள். நாம் இவைகளை விட்டோடி நீதியையும் தேவ பக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையும் சாந்த குணத்தையும் அடையும்படி நாடி விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராடி நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ள வேண்டும். போதுமென்கிற மனதுடனேயே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம்.

உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை. இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம். ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள், கண்ணியிலும் மனுஷர் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள் என்று 1-தீமோ-6:6-12-ல் வேதம் சொல்கிறது.

A. பொருட்கள் மீது ஆசைப்பட்ட ஆகான் இஸ்ரவேலரின் தோல்விக்கு காரணமானான்.(யோசு-7:20) B. கொழுத்த மிருக ஜீவன்கள் மேல் ஆசைப்பட்ட சவுல் ராஜ மேன்மையை இழந்தான். 1-சாமு-15:23. C. பொருட்கள் மேல் ஆசைப்பட்ட கேயாசி குஷ்டரோகியாய் மாறிப்போனான். 2-ராஜா-5:27

D. 30 வெள்ளிக்காசுக்காக ஆசைப்பட்ட யூதாஸ் காரியோத்து இயேசுவையே காட்டிக்கொடுத்தான். யோவா-18:3

E. விற்ற நிலத்தின் கிரயத்தை வஞ்சித்து வைத்த அனனியாவும் சப்பீராலும் மரித்துப் போனார்கள் அப்-5:1-10

F. இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசை வைத்த தேமா, பவுல் அப்போஸ்தலனை பிரிந்து போனான். 2-தீமோ-4:10

ஆகவே இவ்வுலகத்திலே ஐசுவரிமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமல் நிலையற்ற ஐசுவரித்தின் மேல் நம்பிக்கை வையாமலும் நாம் அனுபவிக்கிறதற்காக சகல வித நன்மைகளையும் நமக்கு சம்பூரணமாய் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன் நம்பிக்கை வைத்து நன்மை செய்யவும் நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும் தாராளமாய் கொடுக்கிறவர்களும் உதாரணகுணமுள்ளவர்களுமாய் இருந்து நித்திய ஜீவனை

பெற்றுக்கொள்ள நல்ல ஆதாரத்தை பொக்கிஷமாக சேர்த்து வைக்க வேண்டும். 1-தீமோ-6:17-19.

## தரித்திரம் வேண்டாம்...

தீர்க்கதரிசியின் மனைவியாயிருந்த ஒரு விதவை மிகுந்த கடன் பாரம் பட்டாள். கடன் கொடுத்தவன் அவளுடைய இரண்டு குமாரரையும் தனக்கு அடிமைகளாக்கிக்கொண்டான், அப்பொழுது அந்தப் பெண் மிகுந்த வேதனையடைந்து கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினாள். அப்பொழுது கர்த்தர் எலிசாவை அனுப்பினார். அவன் அந்த விதவையை நோக்கி " நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் வீட்டில் உனக்கு என்ன இருக்கிறது என்று சொல் என்றான், அதற்கு அவள் ஒரு குடம் எண்ணெய் இல்லாமல் உமது அடியாளுடைய வீட்டில் வேறொன்றும் இல்லை என்றாள். அப்பொழுது அவன் நீ போய் உன்னுடைய அயல் வீட்டுக்காரர் எல்லாரிடத்திலும் அநேகம் வெறும் பாத்திரங்களை கேட்டு வாங்கி உள்ளே போய் உன் பிள்ளைகளுடன் உள்ளே நின்று கதவை பூட்டி அந்தப் பாத்திரங்கள் எல்லாவற்றிலும் வார்த்து நிறைந்ததை ஒரு பக்கத்தில் வை என்றான். அவள் அவனிடத்திலிருந்து போய் தன் பிள்ளைகளுடன் கதவைப் பூட்டிக்கொண்டு, இவர்கள் பாத்திரங்களை அவளிடத்தில் கொடுக்க அவள் அவைகளில் வார்த்தாள். அந்தப் பாத்திரங்கள் நிறைந்த பின் அவள் தன் மகன் ஒருவனை நோக்கி இன்னும் ஒரு பாத்திரம் கொண்டு வா என்றாள். அதற்கு அவன் வேறே பாத்திரம் இல்லை என்றான். அப்பொழுது எண்ணெய் நின்று போயிற்று. அவள் போய் தேவனுடைய மனுஷக்கு அதை அறிவித்தாள். அப்பொழுது நீ போய் அந்த எண்ணெயை விற்று உன் கடனை தீர்த்து மீந்ததைக் கொண்டு நீயும் உன் பிள்ளைகளும் ஜீவனும் பண்ணுங்கள் என்றான். இப்படி ஒரு விதவையின் குறைவை கர்த்தர் நீக்கினார். அப்படி நடைபெறாமல் இருந்திருந்தால் அவள் தன் இரண்டு மகன்களை இழந்திருப்பாள். வறுமை அவ்வளவு கொடியது. ஆனால் பிரியமானவர்களே கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான் என்ற வேத வசனத்தின்படி கர்த்தர் தம் குறைவுகளை நிறைவாக்குவார். சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும் கர்த்தரை தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது சங்- 34:10

பிரியமானவர்களே ஆகூரைப் போல நாமும் ஜெபிக்கலாம். எனக்கு ஐசுவரியமும் வேண்டாம் தரித்திரமும் வேண்டாம் அன்றன்றுள்ள படியை எனக்கு அளந்துக்கொடுத்து என்னை ஆசீர்வதியும்.

**கர்த்தர் தாமே உங்கள் யாவரையும் அளவில்லாமல் ஆசீர்வதித்து வரும் ஜுலை மாதம் முழுவதும் வழிநடத்துவாராக.**

கர்த்தரின் பணியில்
அன்பு சகோதரன்
S.ஸ்டாலின்

## தேவ செய்தி

**"உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது". சங்கீதம் 119:105.**

பாவ இருள் நிறைந்த இந்த உலகத்திலே, பரிசுத்தமாய், சாட்சியாய், மற்றவர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக வாழ்வது என்பது மிகப்பெரிய ஒரு சவாலாய் காணப்படுகிறது. சுய பெலத்தாலோ, சுய ஞானத்தாலோ, நம்முடைய திறமைகளை வைத்தோ இதை சாதிக்க முடியாது. பரிசுத்த வேதாகமத்தின் உதவியினால் மாத்திரமே நாம் பரிசுத்தமாய் வாழ முடியும்.

யோசேப்பைப் பாருங்கள்! அவன் கையில், பரிசுத்த வேதாகமம் இல்லை. ஆனால், தேவனைக்குறித்த அறிவு இருந்தது. அவர் எப்படிப்பட்டவர், அவருக்கு எது பிடிக்கும், எது பிடிக்காது என்று அறிந்திருந்தான். அன்று வேதாகமம் அவன் கையில் இல்லை; யோசேப்பின் இருதயத்தில் இருந்தது. தண்ணீர் இல்லாத வெறுங்குழியில் போட்டார்கள்; ஜீவத்தண்ணீராய் வேத வசனம், தேவனைப்பற்றிய அறிவு அவன் இருதயத்தில் நிறைந்து இருந்தது. பாலைவனச் சோலையாய் யோசேப்பு திகழ்ந்தான். காரணம் அவன் இருதயம் தேவ அறிவினால் நிறைந்து இருந்தது. இதை வாசிக்கின்ற சகோதரனே, சகோதரியே, உன் இருதயம் எதினால் நிறைந்து இருக்கிறது? சிந்தித்துப்பார்! உலக இச்சைகளா, பண ஆசையா, சுயபெருமையா? இன்றே வேத வசனங்களால் உன் இருதயத்தை நிரப்பி ஒப்புக்கொடு. நீ ஒரு பாலைவனச் சோலையாய் மாறுவாய். அந்தகார இருள் உன்னைச் சேதப்படுத்தாது.

வேதத்திலே விலைமதிப்பில்லா முத்துக்கள் உண்டு
தினம்தோறும் நீ அம்முத்துக்களைப்பார், உண்மையாக நீயும் ஒரு முத்தாய் மாறுவாய்!

யோசேப்பு தன் அழகையோ, பெலத்தையோ, ஞானத்தையோ நம்பி வாழவில்லை; தேவனை அறியும் அறிவை நம்பி வாழ்ந்தான். தேவ அறிவு அவனுடைய நடைகளைக் காத்துக்கொள்ள உதவியது. தவறான பாதையில் சென்றுவிடாமல், சரியான பாதையில் நடக்க உதவியது.

பாவ இருள் போத்திபாரின் மனைவி மூலமாய் யோசேப்பை துரத்தினது. அவன் சம்மதிக்கவில்லை அவளுடைய கரங்களால் யோசேப்பின் வஸ்த்திரம் கறை படிந்தது. அந்தப் பாவக்கறை படிந்த வஸ்தரமும் தனக்கு வேண்டாம் என்று யோசேப்பு தன் வஸ்திரத்தை அவள் கையிலே விட்டு வெளியே ஓடிப்போனான். பாவ வஸ்திரம் வேண்டாம்! தேவன் தரும் நீதியின் வஸ்திரம் போதும் என்று வெளியே ஓடினான். "நம்மைச் சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி,

நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" என்று எபிரேயர் 12:1 வேதாகமத்தை யோசேப்பு அன்றே அறிந்திருந்தான் போலும்!

வேத வசனங்களை நம் வாழ்வில் சரியான பாதையை தேர்வுசெய்ய உதவுகிறது. கால்களுக்குத் தீபமாய் இருக்கிறது. கால்கள் நடப்பதற்கு மாத்திரமல்ல, ஓடுவதற்கும் உதவுகிறது. பாவ இருளிலிருந்து தப்பித்து ஓட, வேதவசனம் என்னும் தீபம் நமக்கு தேவைப்படுகிறது. நம்முடைய பாதைக்கும் வேதவசனங்கள் வெளிச்சமாய் இருக்கிறது. "நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும் போதும், இடது புறமாய்ச் சாயும் போதும் வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்கு பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்" – ஏசாயா 30:21.

பாவத்தை விட்டு ஓடவேண்டும் என்று வேதம் நமக்கு எச்சரிக்கிறது. அதே சமயத்தில் நிதானமாய் நடக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. சுயபெருமை அல்ல; பொறுமையோடு தேவனின் பாதத்தில் காத்திருக்க வேண்டும். யோசேப்பு சிறையிலே, பொறுமையாய்க் காத்திருந்தான். தேவனுடைய நேரத்திற்காய் காத்திருந்தான். அவனுக்கு தெரியும் சரியான நேரத்தில் தேவன் என்னை உயர்த்துவார் என்று அறிந்திருந்தான். வெறும் தண்ணீராய் காணப்படும் என் வாழ்க்கை, தேவ சத்தம் வரும்போது, சுவையான திராட்சரசமாக மாறும் என்ற விசுவாசம் அவனுக்கு இருந்தது. நான் எகிப்தை மாத்திரமல்ல; அண்டை தேசத்தாரையும், தன் தகப்பன் வீட்டார் அனைவரையும் போஷிக்கும் காலம் வரப்போகிறது என்று பொறுமையோடே காத்திந்தான். அவனுடைய விசுவாச வாழக்கையை சிறைச்சாலையின் கம்பிகளால் முடக்கிப்போட முடியவில்லை.

காரணம் தேவனுடைய சத்தம் அவன் இருதயத்தில் ஓயாது தொனித்துக் கொண்டிருந்தது. சொப்பனங்களின் மூலமாக தேவன் அவனுக்கு உணர்த்திய காரியங்கள் நிறைவேறும் என்று காத்திருந்தான். பார்வோனுக்கு முன்பாக தன்னையல்ல, தேவனையே மகிமைப்படுத்தினான். "நான் அல்ல, தேவனே பார்வோனுக்கு மங்களமான உத்தரவு அருளிச்செய்வார் என்றான்" ஆதி 41:16.தன்னைத் தாழ்த்தினான் தேவனை உயர்த்தினான். இமயம்போல் உயர்ந்திருக்கும் சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு முன்பாக நான் ஒரு தூசி என்ற அறிவு யோசேப்புக்கு இருந்தது.

நம் வாழ்க்கை பாதை சில வேளைகளில் பார்வோன் அரண்மனை போன்ற மண்மேடுகளாய் இருக்கலாம்; சில வேளைகளில் மரண இருளின் பள்ளத்தாக்காக இருக்கலாம். தேவனுடைய வசனம் நம் பாதைக்கு வெளிச்சமாய் இருக்கும் போது, நாம் நிலைதடுமாறாமல், நிதானமாய் நடக்க முடியும். கர்த்தர் தாமே அவருடைய வசனங்களைக் கொண்டு நம்மை நித்திய ஜீவனுக்கேதுவான பாதையில் நடத்துவாராக! ஆமென்!

கர்த்தரின் பணியில்,
அன்பு சகோதரன்

## ஜீவனுள்ள கற்கள் உருவாக்கப்படுகிற இடம்

கர்த்தருக்குள் பிரியமான தேவ பிள்ளைகள் உங்கள் அனைவரையும் கிறிஸ்து இயேசுவுக்குள் வாழ்த்தி இந்த பகுதியில் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

பரிசுத்த ஆவியானவர், நம் அனைவரோடும் இடைபடுவாராக. வேதம் சொல்லுகிறது "நாமே தேவனின் ஆலயமாய் இருக்கிறோம் என்று பிறகு ஏன் நாம் ஒவ்வொருவரும் ஆலயத்திற்கு (சபைக்கு) வரவேண்டும்? நோக்கம் என்ன? சிந்திப்போமா? சிலரின் பதில் இப்படியாக இருக்கும். ஆராதிக்க துதிக்க வேண்டுதல்களையும், விண்ணப்பங்களையும் அவரிடத்தில் வைக்க, வேத வசனம் கேட்க என்று. இவையெல்லாம் ஒரு தனி மனிதன் வீட்டிலோ அல்லது ஒரு தனியான இடத்திலோ இருந்து செய்யலாம். ஆலயத்திற்கு வருவதின் பலன் என்ன? தேவ பிள்ளைகளே, இந்த சபையை தேவன் ஜீவனுள்ள கற்கள் உருவாக்குகிற இடமாக மாற்ற விரும்புகிறார் எப்படி என்று பார்க்கலாம்?

தேவனுடைய ராஜ்ஜியத்தை கட்டுவதற்காக நம்மை உருவாக்க ஏற்ற இடமாக, நமக்கும் தேவனுக்கும் உள்ள உறவை மற்ற சகோதர சகோதரிகளுடன் சேர்ந்து அதிகப்படுத்தி, அனுபவித்து மகிழும் ஒரு இடமாக, தேவனின் அன்பை ருசித்து அந்த அன்பை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளும் இடமாக, கிறிஸ்து இயேசுவுக்குள் ஒரு புதிய சிருஷ்டியை உருவாக்கும் இடமாக இந்த சபையை தேவன் தந்துள்ளார். மேலும் தேவ ஜனமே உருவாக்கப்படுகிற இடத்தை வைத்தே நம்மை யார் என்று கண்டறிவார்கள். உதாரணத்திற்கு நாம் பர்க்கிறவர்களை எப்படி இனம் கண்டு கொள்கிறோம்? இவர்கள் இந்த தேசத்தார், இந்த பாஷைக்காரர்கள் என்று எப்படி கண்டு கொள்கிறோம்?

அவர்களின் பாஷை, உடை, பழக்கவழக்கம், பேச்சுவார்த்தை, உணவு பழக்கம் இவைகளை வைத்துதானே. அப்படியே தேவ பிள்ளைகளே நம்மையும், மற்றவர்கள் இவர்கள் இந்த இடத்தில் உருவாக்கப்பட்டவர்கள் என்று கண்டுணரவேண்டும். லூக்-22:59-ல் வாசிக்கிறது போல பேதுருவை இயேசுவுடனே கூட இருந்தவர் என்று அடையாளம் கண்டு கொண்டனர் அப்படியே நம்மையும் தேவனோடு இணைந்தவர்கள் என்று கண்டுணரவேண்டும்.

### உருவாக்கப்படுகிற(சபையில்) இடத்தில் நாம் செய்ய வேண்டியது

1.நாம் கிறிஸ்து இயேசுவை உட் கொள்ள வேண்டும். 2. அவரைப் போல வாழ, பேச பயிற்சி எடுக்க வேண்டும். அப்போது அவரைப் போல மாற்றப்படுவோம். இந்த இடத்திலே உண்மையாய் அவரை பிரதிபலிக்கிற சகோதர சகோதரிகள் வரும்போது இயேசு கிறிஸ்துவை கொண்டு வருவார்கள். அவரை குறித்தே பேசுவார்கள் அவரை மற்றவருடன் பகிர்ந்து கொள்வார்கள். அவரை தம்முடன் எடுத்து சொல்வார்கள்.

8 உருவாக்கப்படுகிற இடத்தில் பயிற்சிகள்
நாம் கிறிஸ்து இயேசுவை உட் கொள்ள வேண்டும்.

தேவ பிள்ளைகளே, நமது தேவைக்காக மட்டுமே தேவனை தேடாமல் நமது தேவைகள் யாவும் சந்திக்கப்படும் அவரை முதலாவது முழுமனதுடன் தேடும்போது ஞான பாலனை உட்கொள்ள நமக்கு பயிற்சி கொடுக்க வேண்டும். " தேவன் அதிசயம் செய்பவராக" இல்லாததை கொண்டு நடத்துபவராக. இஸ்ரவேல் மக்களை பார்வோன் கைக்கு நீங்கலாக்கி செங்கடலை பிளந்து வழி உண்டாக்கி அதிசயம் செய்பவராக மட்டுமல்லாமல் "அற்புதத்தின் தேவன்" இருப்பதைக்கொண்டு நடத்துவபவராக. கானாவூர் கலியாணத்தில் செய்த அற்புதத்தின் தேவன் என்கிற உபதேசங்களை பாலாக உட்கொண்டிருக்கிற நாம் கர்த்தருடைய வருகையை குறித்த உபதேசம் நியாயதீர்ப்புகளை குறித்த உபதேசங்களாகிய திட உணவை இந்த உருவாக்கப்படுகிற இடத்திலிருந்து உட்கொள்ள வேண்டும்.

## இயேசுவை போல வாழ, பேச பயிற்சி எடுக்க வேண்டும்.

தேவ பிள்ளைகளே 1-பேது-3:15-ன்படி கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள் உங்களிலிருக்கிற நம்பிக்கை குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்போதும் ஆயத்தமாயிருங்கள். கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, சிலரின் சாந்தமான பேச்சில் அநேக காயம் உண்டாக்குகிற ஊசிகள் போன்ற வார்த்தைகள் இருக்கும் அவைகள் உள்ளத்திற்குள் தைக்கும் வேறு சிலரோ மனமேட்டிமையாக பேசுவர், வேறுசிலரின் பேச்சில் களியாட்டு இருக்கும், மற்றவர்களை குறைத்து மதிப்பீடு செய்யும் எண்ணமே பேச்சில் வெளிபடும். அப்படியல்ல, வேதம் சொல்கிறது நமது பேச்சில் சாந்தமும் வணக்கமும் இருக்க வேண்டும். இப்படிப்பட்ட பயிற்சி உருவாக்கப்படுகிற இடத்திலே தரப்பட வேண்டும்.

ஆண்டவரின் அன்பு விளங்க பேசவேண்டும். 1-பேது-1:22-ன் படி சுத்த இருதயத்தோடு ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூற வேண்டும். மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி பயிற்சி வேண்டும். தேவ ஆவியினாலே சத்தியத்திற்கு கீழ்படிகிறவர்களாய் பயிற்சி வேண்டும். ஆத்துமாவை சுத்தமாக்கிகொண்டவர்களாய் தேவ அன்பு விளங்க பேச வேண்டும். ஏசா-53:4-ல் சொன்னது போல "நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது" பாருங்கள் தேவ பிள்ளைகளே, நாம் செய்த பாவத்திற்கு நமக்கு கிடைக்க வேண்டிய ஆக்கினையை அவர் ஏற்றுக்கொண்டார். அவருடைய சமாதானத்தை நமக்கு தந்திருக்கிறார். எவ்வளவு பெரிய அன்பு இப்படியான அன்புள்ளவர்களாக மாற இந்த உருவாக்கப்படுகிற இடத்திலே பயிற்சி வேண்டும்.

## கர்த்தருடைய சேனையாய் எழும்ப பயிற்சி எடுக்க வேண்டும்.

நாம் ஜெபிப்பதற்கு பயிற்சி தேவனுக்கு பிரியமான தேவ ஜனமே, அநேக விதமான ஜெபங்கள் உண்டு எல்லாம் அனைவரும் அறிந்ததே, எரேமி-31:16-ல் கண்ணீர் விடாதபடிக்கு உன் கண்களை காத்துக்கொள். ஆம் தேவ பிள்ளைகளே. மனிதருக்கு முன்பாக விடும் கண்ணீர் வேண்டுதல்களாகவும் விண்ணப்பங்களாகவும் கேட்கப்படும் என்கிற பயிற்சி நம்மில் வேண்டும். 1-சாமு-17: 4-ம் வசனம் இப்படியாக

சொல்கிறது. காத் ஊரானாகிய கோலியாத் என்னும் பேருள்ள ஒரு வீரன் பெலிஸ்தரின் பாளயத்திலிருந்து புறப்பட்டு வந்து நடுவே நிற்பான். அவன் உயரம் ஆறு முழமும் ஒரு ஜாணுமாம். தேவ ஜனமே நாம் நமது வாழ்க்கையில் அநேக கோலியாத்துக்களை சந்தித்திருக்கிறோம். அவனது நோக்கம் நம்மை பயப்படுத்துவது மட்டுமே. 1-சாமு-17:24-ல் எல்லாரும் அந்த மனுஷனை காணும்போது மிகவும் பயப்பட்டு அவன் முதுகுக்கு விலகி ஓடி போவார்கள். ஆனால் தேவனுக்கு பயந்து தேவனை மாத்திரமே நம்பி இருந்த தாவீது கர்த்தரின் நாமத்தை உயர்த்துகிறவராய் (1-சாமு-17:45) அவனுடன் போரிட்டு கோலியாத்தை வென்றான். இப்படியான கோலியாத்துகளை முறியடிக்கக்கூடிய நம்மை கர்த்தருடைய சேனையாய் எழும்ப பயிற்சி தர வேண்டும்.

## புதிய சிருஷ்டியாக உருவாக பயிற்சி

பிரியமானவர்களே, நாம் உருவாக்கப்படுகிற இந்த இடத்திற்கு யாரேனும் புதிதாய் வருகிறார்கள் என்றால் இயேசுவை அறியாதவர்கள் அவர்கள் நம்மை பார்த்து இந்த இடத்தில் இயேசுதான் தலையாய் இருக்கிறார். மற்ற அனைவரும் தேவனுடைய இராஜ்ஜியத்தை கட்டுவதற்கு உடன் வேலையாட்களே என்று உணர வேண்டும். மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்படிகிறவர்களாய் நம்மை காண வேண்டும். அப்-5:29-ல் பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் மனுஷருக்கு கீழ்படிவதைப் பார்க்கிலும் தேவனுக்கு கீழ்ப்படிகிறது அவசியமாய் இருக்கிறது என்ற உறுதியுடன் சொன்ன அவர்களை பின்பற்றுகிரவர்களாய் நம் காண வேண்டும்.

கர்த்தரின் நாமத்தை மட்டுமே மகிமைபடுத்துகிறவர்களாக தன்னைத்தான் தாழ்த்தி, வெறுமையாக்கி தேவ சித்தத்தை செய்பவர்களாக மாற வாஞ்சிக்க வேண்டும். நம் அன்றாட வாழ்க்கையில் தேவனின் அடிச்சுவடுகளை தொடர்ந்து வருபவர்களாக மாற வேண்டும். கர்த்தரை நல்லவர் என்பதை ருசிக்க வேண்டும், பகிர வேண்டும். கலா-2:20 – ன் படி கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டேன் ஆயினும் பிழைத்திருக்கிறேன் இனி நான் அல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் என்ற வார்த்தையின் படி புதிய சிருஷ்டியாக உருவாக பயிற்சி எடுக்க வேண்டும்.

நாம் பரதேசியானாலும். நமது வாழ்க்கை வானாந்திரம் ஆனாலும் நமது பெலன் குன்றி போனாலும் அவர் நம்மை விசாரிக்கிறானபடியால் நமது கவலைகளை அவர் மேல் வைத்து அவரை அப்படியே விசுவாசிக்கிற கூட்டமாக மாற வேண்டும். இப்படியாக நமது சபையை ஜீவனுள்ள கற்கள் உருவாக்குகிற ஒரு இடமாக திகழ கர்த்தர் தாமே கிருபை செய்வார் என கர்த்தருக்குள் வாஞ்சிக்கிறேன்.

கர்த்தரின் நாமத்திற்கே மகிமை உண்டாவதாக ஆமென்

கர்த்தரின் பணியில்,
அன்பு சகோதரி

# இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

" உன் பேரை பெருமைப்படுத்துவேன்
நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் " ( ஆதி–12:2 )

சகோதரி.ரெஜினா ராமமூர்த்தி
செல்வன்.ஜோசப் பிரின்ஸ் பால் ஜெகநாதன்
செல்வன்.ஏனோக் ஜோன் மார்க்
செல்வி.கீதா மகேஷ்ராஜ்
செல்வி.அஃபியா ஆரோக்கியதாஸ்
செல்வி.காவ்யா கண்ணன்
செல்வன்.டேனியேல் ஜான் போஸ்கோ
சகோதரி.ஸ்நேகா எபநேசர்
செல்வன்.கிதியோன் ஞானசேகர்
சகோதரி.அஸ்வினி தினேஷ்
சகோ.ஆல்வின் ஜீலியஸ் தம்புகுமார்
செல்வன்.ஜார்ஜ் ஜான் போஸ்கோ
செல்வி.ஜீயோனா ஷேரன் செல்வசிங்
சகோதரி.ஏன்ஜலீனா மணிராஜ்
செல்வன்.ஸப்பரின் தீமோதி சிவகுமார்
செல்வன்.ஜான் லேவிஸ் ஜான்கெஸ்டன்
சகோதரி.பவானி ஆரோக்கியராஜ்
செல்வி. வென்பா ஜாயிஸ் பிரியா ரவி ஜான்பீட்டர்
சகோதரி.அமலோர்பவ மேரி ஜான் போஸ்கோ

சகோ.தாமஸ்
செல்வன்.மோனித் ராஜ் வெங்கடேஷ்
செல்வன்.மெல்வீன் சாம் சாமுவேல் தாசையா
சகோ.சதீஸ் குமார் எத்திராஜ்
சகோதரி.ஜெபராணி தர்மர்
சகோ.தாஸ்(yacco)
செல்வன்.கிளாட்வீன் சாமுவேல் எட்வீன்
செல்வி.ஹாணி ஹார்ஸிதா வெங்கடேஷ்
சகோதரி.தேவ சொருபி கமலதாசன்
செல்வி.லிடியா இபோன்சா குணா
சகோ.ஸ்டாலின்
சகோதரி.ரோஸ்லின் மேரி பால்ராஜ்
சகோ.வின்செண்ட் ஸ்வீட்
சகோதரி.பெபின்மேரிஜோ ஜெய் சாம் டேனியேல்
சகோதரி.ஹெப்ஸிபா பாமா சாம் ஆனந்த்
சகோ.அசோக் குமார்
சகோ.சைமன் ஜெயகுமார்
சகோ.ஸ்டீபஃன் ஜெயகுமார்

பிறந்த நாள் மற்றும் திருமண நாளை அனுசரிக்கிற உங்கள் எல்லோரையும் சபையோராக வாழ்த்துகிறோம்.

# இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாயிருக்கிறார் (மல்கியா 2:14)

திருமதி / திரு. பக்தராஜ்
திருமதி / திரு. அசோக்குமார்
திருமதி / திரு. ஜோன்செல்வசிங்
திருமதி / திரு. சதீஸ் குமார்

திருமதி / திரு. ஜெஸ்டின்
திருமதி / திரு. வர்கீஸ்/பத்மினி
திருமதி / திரு. ரிச்சர்ட்சன் டேனியல்

"

# 2024 – ஜீலை மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 07/07/2024 | சகோ. M. கிறிஸ்டோபர் | சகோ.ஸ்டாலின் |
| 14/07/2024 | சகோ. சாம் சுந்தர் | சகோ. அருண் இம்மானுவேல் |
| 21/07/2024 | சகோ. பக்த ராஜ் | சகோ. அசோக் குமார் |
| 28/07/2024 | சகோ. சுகுமார் | சகோ. தாமஸ் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 05/07/2024 | சகோ. ஸ்டாலின் | பாஸ்டர்.எட்வின் சுந்தர் |
| 12/07/2024 | சகோ. ரவிஜான் பீட்டர் | சகோ. ஸ்டாலின் |
| 19/07/2024 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 26/07/2024 | சகோ. சுகுமார் | சகோ. சாமுவேல் தாசையா |

## ஆராதனை ஒழுங்குகள்

11/7/2024 அன்று முழு இரவு ஜெப ஆராதனை
இடம் – பின்னர் அறிவிக்குப்படும்
நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணி வரை

26/7/2024 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை
இடம் – பின்னர் அறிவிக்கப்படும்
நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:00 மணி வரை
வேத வினா பகுதி – ஏசாயா – 34 முதல் 66 அதிகாரங்கள் வரை

சகோதரிகள் ஐக்கிய கூடுகை தேதி பின்னர் அறிவிக்கப்படும்
இடம் – எப்சிபா ஸ்டீபன் வீடு
நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:00 மணி வரை
வேத வினா பகுதி – ரோமர்

### சனிக்கிழமை
சிறுவர் வேதாகம பள்ளி
இடம் – பின்னர் அறிவிக்கப்படும்
நேரம் – மாலை 3:30 முதல் 5:15 ரை
( June முதல் August வரை விடுமுறை )

### திங்கட்கிழமை
பெண்கள் ஐக்கிய ஜெப கூடுகை
இடம் – எப்சிபா ஸ்டீபன் வீடு
நேரம் – மாலை 5:30 முதல் 6:30 வரை

### செவ்வாய்கிழமை
குடும்ப ஆசீர்வாத ஜெப கூடுகை
இடம் – பின்னர் அறிவிக்கப்படும்
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

### வியாழக்கிழமை
பாடல் பயிற்சி கூடுகை
இடம் – பின்னர் அறிவிக்கப்படும்
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

# 2024 ஜீலை மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**



1. கர்த்தர் தம்முடைய ஜனங்களுக்கு எப்படி ஆகாரம் அளுளினார்?
2. போவாஸ் ரூத்திடம் எப்படி பேசினார்?
3. யூதாவின் அதிபதியாகிய சேஸ்பாத்சாரிடத்தில் எண்ணிக்கொடுத்த பொண்தட்டுகள் எத்தனை?
4. அலங்கத்தைக் கட்டுகிற செய்தியைச் கேட்டபோது, யார் கோபித்து, எரிச்சலடைந்து, யூதரைச் சக்கந்தம்பண்ணான்?
5. இத்தோவின் குமாரனாகிய தீர்க்கதரிசி யார்?
6. பெரியவரும் பேர்பெற்றவருமானவர் யார்?
7. இஸ்ரவேல் வீட்டைக் கட்டுவித்த இரண்டு ஸ்திரிகள் யார்?
8. மீன்வாசலை கட்டினவர்கள் யார்?
9. கர்த்தர் ஏவின ஆவி ஏது?
10. ஆகாயும் இத்தோவின் குமாரனாகிய சகரியாவும் எதை சொல்லிவந்தபடியினால் அவர்களுடைய காரியம் கைகூடி வந்தது?
11. எஸ்றா மேல் இருந்த ஒன்று, நெகேமியாவின் மேலும் இருந்தது அது என்ன?
12. நகோமி தனக்கு சூட்டிக்கொண்ட மறுபெயர் என்ன?
13. பிதாக்கள் அநுபவித்த சிறுமையை கண்டு, எங்கே அவர்கள் கூப்பிடுதலைக் கர்த்தர் கேட்டார்?
14. இஸ்ரவேல் புத்திரருக்கு மீனையும் சகலவித சரக்குகளையும் விற்றவர்கள் யார்?
15. யோசதாக்கின் குமாரன் யார்?

விடைகளை வருகின்ற 20-07-2024 க்குள் (WhatsApp #+91 8940523562) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில்

**" ரூத், நெகேமியா, எஸ்றா "**

அதிகாரங்களில் இருந்து பதிலை கண்டுபிடிக்கவும்.

**...தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; –மத்தேயு 7:7**

## 2024 – ஜீன் மாத வேத வினாவுக்கு விடை

1. உம்ரி – 16:23,24
2. தாவீது – 2:2
3. சாலோமோன் – 10:17
4. சேபாவின் ராஜஸ்திரி – 10:1,2
5. எலியா – 17:10
6. ஈயேல் – 16:34
7. ரேகோபெயாம் – 12:11
8. யேசபேல் – 21:25
9. அசியா – 11:27
10. ஆசா – 15:14
11. யோசபாத் – 22:32
12. ஆபியாம் – 15:1,3
13. 27000 – 20:30
14. சாலமோன் , சகலதேசத்தார் – 10:25
15. எலியா – 19:4

## 2024– ஜீன் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

SIS. சுகந்தி தம்பு குமார்
SIS. பியூலா மெர்சி பால்
SIS. நித்யா ஜோன்ஸ்
SIS. தயா ஏசுரத்தினம்
SIS. ஜெஸ்லட் வர்க்கீஸ்
SIS. ஷீபா அருண்
SIS. சாந்தி
SIS. போத்தியம்மாள்
SIS. பத்மினி வர்க்கீஸ்
SIS. வனிதா

# கர்த்தர் தேடும் மனிதன்

எசேக்–22:30 நான் தேசத்தை அழிக்காதபடிக்கு திறப்பிலே நிற்கவும், சுவரை அடைக்கவும் தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன். ஒருவனையும் காணேன். தேவன் தேசத்தை அழிக்காதபடிக்கு திறப்பிலே நிற்க ஒரு மனுஷனை தேடுகிறார், தேடின தேவன் ஒருவனையும் காணேன் என்று சொல்கிறார்.எங்கே எல்லாம் தேடுகிறார் என்றால்

## 1.தீர்க்கதரிசகள் நடுவில் தேடுகிறார்

எசேக்–22:25 ஆத்துமாக்களை பட்சிக்கிறார்கள். 22:28 கர்த்தர் உரைக்காதிருந்தும் கர்த்தர் உரைத்தார் என்று சொல்லி சாரமற்ற சாந்தைப் பூசுகிறார்கள். தீர்க்கதரிசகள் நடுவில் தேடுகிறார் அவர்கள் சாரமற்ற அதாவது கிறிஸ்துவை விட்டு விட்டு மனிதர்களின் புகழை பாடுகிறார்கள்.

## 2.ஆசாரியர்கள் நடுவில் தேடுகிறார்

எசேக்–22:26 வேதத்திற்கு விரோதமாக அநியாயஞ் செய்து பரிசுத்தத்தை பரிசுத்தக் குலைச்சலாக்குகிறார்கள். ஆசாரியர்கள் நடுவில் தேடுகிறார் அவர்கள் வேதத்திற்கு விரோதமாக அநியாயம் செய்கிறார்கள்.

## 3.பிரபுக்கள் மத்தியில் தேடுகிறார்

எசேக்–22:27 இரைகளைக் கவ்வுகிற ஓநாய்களைப் போல பொருளை வாங்கி ஆத்துமாக்களை கொள்ளையிடுகிறார்கள். பிரபுக்கள் மத்தியில் தேடுகிறார் அவர்கள் ஆத்துமாக்களை கெடுக்கிறார்கள்.

## 4.ஜனங்கள் மத்தியில் தேடுகிறார்

எசேக்–22:29 ஜனங்கள் இடுக்கண் செய்து சிறுமையும் எளிமையுமானவனை ஒடுக்கி அந்நியனை அநியாயமாய் துன்பப்படுத்துகிறார்கள். ஜனங்கள் மத்தியில் தேடுகிறார் அவர்கள் எளியவனை ஒடுக்குகிறார்கள். நான்கு விதமான கூட்டத்தாரிடத்தில் தேடுகிறார், தேடின தேவன் ஒருவனையும் காணேன் என்று சொல்கிறார். சற்று சிந்தித்து பார்த்தால் இந்த நான்கு விதமான கூட்டத்தார்கள் சபையிலும் இருப்பார்கள்.

அப்படி என்றால் தேவன் தேடும் மனிதன் எப்படிப்பட்டவனாக இருக்கவேண்டும்?

எபி-3:1-ல் நாம் வாசிக்கிறோம், நாம் அறிக்கை பண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதானமான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவை கவனித்துப்பாருங்கள். இயேசு கிறிஸ்து மனிதன் என்று சொல்லப்பட்ட இடங்களில் இருந்து நாம் தேவன் தேடும் மனிதன் எப்படிப்பட்டவனாக இருக்கவேண்டும் கற்றுக் கொள்ளலாம்.

## முதலாவது... சுயம் செத்தவனாக இருக்க வேண்டும்

பிலிப்-2:6,7,8 தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார். முதலாவது தாழ்மையுள்ளவராக இருக்க வேண்டும். தாழ்மை என்பது சுயம் செத்தவனாக இருக்க வேண்டும். கலா-2:20. கிறிஸ்துவுடனேகூட சிலுவையில் அறையப்பட்டேன் ஆயினும் பிழைத்திருக்கிறேன். இனி நானல்ல கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். வெளி-3:1 நீ உயிருள்ளவன் என்று பெயர்கொண்டிருந்தும் செத்தவனாய் இருக்கிறாய். ஏனென்றால் கிரியை இல்லை.

## இரண்டாவது... இயேசுவுக்காக பாடுகளை அனுபவிக்கும் மனிதனாக இருக்க வேண்டும்

யோவா-19:5 கிறிஸ்து முள் முடியும் சிவப்பங்கியும் தரித்தரவராய் வெளியே வந்தார். அப்போது பிலாத் அவர்களை நோக்கி இதோ இந்த மனுஷன் என்றான். பாடுகளை பிரச்சனைகளை சகிக்கின்ற விதம். ஏசாயா-53:7 அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும் தன்னை மயிர்க்கத்திரக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும் அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். யோவ-18:5 அவருக்கு அவர்கள் பிரதியுத்தரமாக நசரேனாகிய இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள். அதற்கு இயேசு நான்தான் என்றார். அவரைக் காட்டிக்கொடுத்த யூதாசும் அவர்களுடனேக் கூட நின்றான். பாடுகளை பிரச்சனைகளை நாம் சகிக்கும் போது, தைரியமாக அதை எதிர் கொள்ளும் போது, மத்-11:29 என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொள்ளுங்கள் என்றார். அவர் நுகத்தை நம்மேல் ஏற்றுக்கொண்டு பாடுகளை அனுபவிக்கும் மனிதன்.

## மூன்றாவது... கர்த்தரால் அங்கிகரிக்கப்பட்ட மனிதனாக இருக்க வேண்டும்

அப்-2:22 நசரேனேகிய இயேசுவைக்கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும் அற்புதங்களையும் அடையாளங்களையும் நடப்பித்து அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார்.

English bible- Jesus of Nazareth, a man approved of God

அதாவது கிறிஸ்து தேவனால் அங்கிகரிக்கப்பட்ட மனிதர் என்று இருக்கிறது. தேவன் தேடும் மனிதன் கர்த்தரால் அங்கிகரிக்கப்பட்ட மனிதராக இருக்க வேண்டும். மத்-7:22,23 உங்களை எனக்குத் தெரியாது என்றான். ஏசாயா-8:18 நானும் கர்த்தர் எனக்கு கொடுத்த பிள்ளைகளும் சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தராலே இஸ்ரவேலின் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம் என்று வாசிக்கிறோம்.

**நான்காவது... குற்றஞ்சாட்டப்படாதவனாக இருக்க வேண்டும்.**

அப்-13:38 இவர் மூலமாய் உங்களுக்கு பாவமன்னிப்பு உண்டாகும் என்று அறிவிக்கப்படுகிறது. மனிதனை தேவனிடத்தில் ஒருவன் ஒப்புரவாக்க வேண்டுமென்றால் அந்த மனிதன் சரியானவனாக இருக்க வேண்டும். ஆகையால், கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும் ஒரே மனைவியை உடைய புருஷனும் ஜாக்கிரதையுள்ளவனும் தெளிந்த புத்தியுள்ளவனும் யோக்கியதையுள்ளவனும் அந்நியரை உபசரிக்கிறவனும் போதகசமர்த்தனுமாய் இருக்க வேண்டும்.

**ஐந்தாவது... மரித்தோரிலிருந்து எழுந்தவனாக இருக்க வேண்டும்.**

அப்-17:31 மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார் அதிலே தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு பூலோகத்தை அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லோருக்கும் விளங்கப்பண்ணினார். ரோம-6:3,4,5 புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ள வேண்டும். ரோம-1:5 மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனாய் இருக்கிறார். மரித்தோரிலிருந்து எழுந்தவனாக புது சிருஷ்டியாக இருக்க வேண்டும்.


கர்த்தர் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக.

**வாலிபம் இயேசுவுக்கே..**

நம் அஹமதி தமிழ் திருச்சபை மற்றும் நம் சபையின் விசுவாசிகளுக்காகவும், சபையின் ஊழியர்களுக்காகவும், உங்களது தனிப்பட்ட ஜெபத்திலே ஜெபித்துக் கொள்ளுங்கள்.

# Kids Corner

## Noah's Ark Crossword





**Across**
2. God put this in the sky
3. A covenant is a ______.
4. This means to listen.
5. Noah built an _____?
6. Who built the ark?

**Down**
1. Rain fell on the earth for _____days and _____ nights.
5. Noah brought these on the ark.
7. Who told Noah to build the ark?

## Noah's Ark Maze

Help the animals find Noah's Ark.







Joshua Johnson

# கடந்த மாத நிகழ்வுகளில் உங்கள் பார்வைக்கு சில










# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

**முதன்மை ஊழியர் : சகோ. S.ஸ்டாலின்**
Ph.66021072 – 96760452

**செயலாளர் : சகோ.S.சுகுமார்**
Ph.99837646

**பொருளாளர் : சகோ.S.சிவ குமார்**
Ph.97224276

**பெண்கள் ஐக்கிய தலைவி: சகோதரி. செலின் டேவிட்**
Ph.65967170 – 99368775

**வாலிப ஐக்கிய தலைவர் : சகோ.சுபின் சிங்**
Ph.65197164–65772762

Follow us Social Media Youtube & Facebook - ATC TAMIL

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Website Address - ahmaditamilchurch.com

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Church Postel Address
Your name,,
Po. Box No : 46795.
Fahaheel,64018, Kuwait.

Private Circulation only